# அவசர நிவாரணப் பொதிகள்

Emergency relief packages - Tamil

கொரோனா வைரஸ் (COVID-19) காரணமாக நீங்கள் உணவைப் பெற முடியாத உங்களுக்கு இலவச அவசர உணவு நிவாரணப் பொதிகள் கிடைக்கின்றன.

அவசர நிவாரணப் பொதியைப் பெற நீங்கள் அவுஸ்திரேலிய குடிமக்களாகவோ அல்லது நிரந்தர வதிவாளராகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை.

அவசர உணவு நிவாரணப் பொதியைப் பெற, நீங்கள் கட்டாயமாக:

- உங்களிடம் கொரோனா வைரஸ் இருப்பதால், சோதனை முடிவுகளுக்காகக் காத்திருக்கவோ நெருங்கிய தொடர்பு இருப்பதால் சுய-தனிமை அல்லது தனிமைப்படுத்துக்கு உட்படுத்தப்படவோ வேண்டும்
- உங்களுக்கு உதவக்கூடிய நண்பர்கள், குடும்பத்தினர் அல்லது வேறு நபர்கள் இல்லை என்பதை அறிய வேண்டும்.

ஒரு தொகுதியைப் பெறுவதற்கு, 1800 675 398 இல் கொரோனா வைரஸ் அவசர எண்ணை அழைத்து, கொரோனா வைரஸ் உள்ளவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான விருப்பத்தைத் தேர்வுசெய்யுங்கள் (இதில் உணவு நிவாரணம் அடங்கும்). .உங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், அவசர எண்ணை அழைக்கும்போது மொழி தெரிவிற்கு 0 ஐத் தேர்வுசெய்க.

அவசர எண்ணை நீங்களாகவே அழைக்க முடியாவிட்டால், உங்களுக்குத் தெரிந்த ஒருவர் உதவிக்காக அழைக்கலாம்.

நீங்கள் வேலையைத் இழந்திருந்தால் நிதி உதவியையும் பெறலாம். மேலும் தகவலுக்கு கொரோனா வைரஸ் அவசர எண்ணை அழைக்கவும்.

## பொதியில் இருப்பது என்ன?

இந்தப் பொதியில் தானியங்கள், நீண்ட நாள் பேணிவைக்கக்கூடிய பால், சீனி, பாஸ்தா மற்றும் பேணியில் அடைக்கப்பட்ட காய்கறிகள் போன்ற அடிப்படை உணவுகள் உள்ளன. அத்துடன் சவர்க்காரம், டியோடரண்ட் மற்றும் பற்பசை போன்ற தனிப்பாவனை பொருட்களும் இதில் உள்ளன. உங்களுக்கு தேவைப்பட்டால், நீங்கள் நப்கின் துணிகள் மற்றும் குழந்தைகளுக்கான உணவுவையும் பெற்றுக்கொள்ளலாம்.

பொதிகள் இலவசமாக கிடைக்கும். பொதியானது இரண்டு வாரங்களுக்கு போதுமான அடிப்படை உணவு மற்றும் தனிப்பட்ட பொருட்களை உங்களுக்கு வழங்கும். உங்களுக்கும் உங்களுடன் சேர்ந்து வசிக்கும் மற்றவர்களுக்கும் போதுமான உணவு மற்றும் பிற பொருட்களைப் பெறுவீர்கள்.

## உணவு

நீங்கள் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தால் அல்லது உங்களுக்காக சமைக்க முடியாவிட்டால், நீங்கள் உணவை வீட்டுக்கு வரவழைக்க முடியும். நீங்கள் அவசர எண்ணை அழைக்கும்போது, உங்கள் விபரங்கள் உங்கள் உள்ளூர் கவுன்சிலுக்கு வழங்கப்படும், மேலும் அவர்கள் உங்கள் உதவி விருப்பங்கள் குறித்து உங்களைத் தொடர்புகொள்வார்கள்.

## நான் பொதியை பெற்றுக்கொள்வது எப்படி?

நீங்கள் பெற்றுக்கொள்வதற்காக பொதிகள் உங்கள் வீட்டு கதவருகில் வைக்கப்படும்.

To receive this publication in a different format email covid-19@dhhs.vic.gov.au <covid-19@dhhs.vic.gov.au>.

Authorised and published by the Victorian Government, 1 Treasury Place, Melbourne.

© State of Victoria, Australia, Department of Health and Human Services, 27 August 2020.

Available at DHHS.vic –Translated resources - coronavirus (COVID-19) <https://www.dhhs.vic.gov.au/translated-resources-coronavirus-disease-covid-19>

Emergency Relief Packages - Tamil